**தமிழ் நாடு அரசு**

**சுருக்கம்**

தமிழ் நாடு நிர்வாகத் தீர்ப்பாயம் - சட்ட அலுவலர்கள் - தொடர் கட்டணம் திருத்தியமைத்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (மாநிதீ) துறை**

அரசாணை நிலை எண்.190 நாள்: 26.10.99

படிக்கப்பட்டது:-

1. அரசு ஆணை நிலை எண்.1602, பொதுத் துறை, நாள் 29.9.98
2. தமிழ் நாடு நிர்வாகத் தீர்ப்பாய முதுநிலை வழக்கறிஞரின் கடித எண். 38140/அ1/98-1, நாள் 21.10.98

.......

<u>ஆணை:</u>

படிக்கப்பட்ட கடிதம் இரண்டில் தமிழ் நாடு நிர்வாகத் தீர்ப்பாய முதுநிலை வழக்கறிஞர் அவர்கள் சட்ட அலுவலர்களின் தொடர்க்கட்டணத்தைக் கீழ்க்கண்டவாறு திருத்தியமைக்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டார்:

1. முதுநிலை வழக்கறிஞர் மாதம் ஒன்றுக்கு ரூ.5000/-
2. நிலை வழக்கறிஞர் மாதம் ஒன்றுக்கு ரூ.4000/-
3. கூடுதல் நிலை வழக்கறிஞர் மாதம் ஒன்றுக்கு ரூ.4000/-
4. அரசு வழக்கறிஞர் மாதம் ஒன்றுக்கு ரூ.3000/-

மேற்கண்ட முதுநிலை வழக்கறிஞரின் கோரிக்கை அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தின் சட்ட அலுவலர்களின் தொடர் கட்டணம் கீழ்க்கண்டவாறு திருத்தியமைத்து ஆணை வெளியிடப்படுகிறது:-

முதுநிலை வழக்கறிஞர், மாதம் ஒன்றுக்கு ரூ.5000/-(ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)
நிலை வழக்கறிஞர், மாதம் ஒன்றுக்கு ரூ.4000/- (ரூபாய் நான்காயிரம் மட்டும்)
கூடுதல் நிலை வழக்கறிஞர், மாதம் ஒன்றுக்கு ரூ.4000/-(ரூபாய் நான்காயிரம் மட்டும்)

அரசு வழக்கறிஞர், மாதம் ஒன்றுக்கு ரூ.3000/-(ரூபாய் மூன்றாயிரம் மட்டும்)

மேற்கண்ட திருத்திய தொடர் கட்டணம், இவ்வாணை வெளியிடப்பட்ட நாள் முதல் நடைமுறைக்கு வரும்.

மேற்கண்ட செலனிம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் செலவிடப்படும்:- "2014 00 நீதி நிர்வாகம் - 114 சட்ட ஆலோசகர்கள் மற்றும் வழக்குரைஞர்கள் - 1 திட்டம் சாராதது - AI - தமிழ் நாடு நிர்வாகத் தீர்ப்பாயம் - 33 தொழில் முறை சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் (த.தொ.கு. 2014 00 114 AI 3304)"

இந்த ஆணை நிதித்துறையின் 21.10.99 நாளிட்ட அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.74828/பொது/99-1, ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷீலா பாலகிருஷ்ணன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

முதுநிலை வழக்கறிஞர்,
தமிழ் நாடு நிர்வாகத் தீர்ப்பாயம், சென்னை-6.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-9/18/35.
மாநிலக் கணக்காய்வர், சென்னை-9.

நகல்:

நிதி (பொது ) துறை, சென்னை-9
பொது (சட்ட அலுவலர்) துறை, சென்னை-9,

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

ஒம்..
பிரிவு அலுவலர்.